# தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

## அவசரக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10. 30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### பொருள்கள்

1. தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக அரசு அறிவித்துள்ளதை முன்னிட்டும், தென்மாவட்டங்களில் கோவில் நகரங்களில் ஒன்றாகவும் தூத்துக்குடி மாநகர் பகுதி இருந்து வருகிறது. இம்மாநகரில் அமையப்பெற்றுள்ள கடற்கரை சாலையில் உள்ள மிகவும் பிரசித்திபெற்ற மாதாகோவில் மற்றும் வடக்கு சம்பந்தமூர்த்தி தெருவில் உள்ள சிவன்கோவில் ஆகியவற்றினை தரிசிக்க சுற்றுலா பயணிகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளார்கள்.

எனவே மேற்கண்ட கோவில்களுக்கு செல்லும் யாத்திரியர்களின் வசதியினை மேம்படுத்த இம்மாநகரின் முக்கிய சாலையான பழைய பேருந்து நிலையம் முதல் கிழக்குபகுதி கடற்கரை சாலை வரை யாத்திரியர்கள் மற்றும் பொதுமக்கள் நடந்து செல்ல ஏதுவாகவும் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறு இன்றி செல்வதற்கும் கைப்பிடியுடன் கூடிய நடைபாதை அமைக்கவும், பூபாலராயர்புரம் பகுதி சாலையில், சாலை பிரிக்கும் பணி அமைக்கவும் (Road divider) கீழ்க்கண்ட விபரப்படி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 68.00 லட்சத்தில் 50 சதவீதம் தமிழ்நாடு சுற்றுலாத்துறை மூலமாகவும் மீதமுள்ள 50 சதவிகித தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலையம் முதல் கடற்கரை சாலை வரை கைபிடியுடன் கூடிய நடைபாதை அமைக்கும் பணி | 60.00 |
| 2 | பூபாலராயர்புரம் பகுதி சாலை பிரிக்கும் பணி | 8.00 |

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/ 31244/08

**தீர்மானம் எண்: 239**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

2. தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் முதற்கட்டமாக முக்கியமான தெருக்களில் மின்சார சேமிப்பு விளக்குகள் அமைக்கவும் இதற்கான செலவீனத்திற்கும் மாமன்றம் தனது தீர்மான எண் 75

நாள் 27–8–2008இல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில் 28–11–2008இல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் தொழில்நுட்ப உறையில் மெசர்ஸ் KCP Sixwell power systems சேலம் நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளியில் கண்டுள்ள நிபந்தனைகளை முழுமையாக பூர்த்தி செய்யப்படாததால் இதனை நிராகரிக்கப்பட்டு மற்ற இரு நிறுவனங்களின் விலை விகித பட்டியல் உறை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

100 எண்கள் மின்சார சேமிப்பு விளக்கு பிட்டிங்குகளுடன் மற்றும் இணைந்த பொருட்கள் விநியோகம் செய்ய

1) மெசர்ஸ் சென்னை லைட்டிங் (பி) லிமிடெட், சென்னை – ரூ.8,66,000/–

2) மெசர்ஸ் ஜெய கிஷோர் ஏஜென்சிஸ், திருநெல்வேலி – ரூ.8,39,675/–

**அலுவலக குறிப்பு:**

குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக ரூ.8,39,675/–க்கு கொடுத்துள்ள மெசர்ஸ் ஜெய கிஷோர் ஏஜென்சீஸ் திருநெல்வேலி நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1/18217/8/2008

**தீர்மானம் எண்: 240**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

3) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் முக்கியமான சந்திப்புகள் மற்றும் பேருந்து நிலையங்களில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்திட மன்றத்தால் பரிந்துரைக்கப்பட்டு அரசாணை எண் 109 நாள் 01.08.2008ல் அனுமதிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி விளக்குகள் அமைக்கும் இடங்களுக்கும், செலவினத்திற்கும் மாமன்றம் தனது தீர்மான எண் 75 நாள் 29.08.2008ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில் 28.11.2008ல் 20 மீட்டர் உயரமுள்ள உயர்மின் கோபுர விளக்கு 3 எண்கள் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் தொழில் நுட்ப உறையில் மெசர்ஸ் KCP Sixwell power systems சேலம் நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளியில் கண்டுள்ள நிபந்தனைகளை முழுமையாக பூர்த்தி செய்யப்படாததால் இதனை நிராகரிக்கப்பட்டு மற்ற இரு நிறுவனங்களின் விலை விபரப் பட்டியல் உறை விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

1) மெசர்ஸ் டூவெல் அசோசியேட்ஸ், கணேசபுரம் சென்னை – ரூ. 6,49,500/–

2) மெசர்ஸ் குமரன் இண்டஸ்டிரிஸ் தாம்பரம் – சென்னை – ரூ.6,58,000/–

**அலுவலக குறிப்பு:**

குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக ரூ.6,49,500/–க்கு கொடுத்துள்ள மெசர்ஸ் டூவெல் அசோசியேட்ஸ் சென்னை நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1/18217/8/2008

**தீர்மானம் எண்: 241**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

4) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் முக்கியமான சந்திப்புகள் மற்றும் பேருந்து நிலையங்களில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்திட மன்றத்தால் பரிந்துரைக்கப்பட்டு அரசாணை எண் 109 நாள் 01.08.2008ல் அனுமதிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி விளக்குகள் அமைக்கும் இடங்களுக்கும் , செலவினத்திற்கும் மாமன்றம் தனது தீர்மான எண் 75 நாள் 29.08.2008ல் அனுமதி அளிக்கப்பட்டு உள்ளதன் பேரில் 28.11.2008ல் 16 மீட்டர் உயரமுள்ள உயர்மின்

கோபுர விளக்கு 5 எண்ணங்கள் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் தொழில் நுட்ப உறையில் மெசர்ஸ் KCP Sixwell power systems சேலம் நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளியில் கண்டுள்ள நிபந்தனைகளை முழுமையாக பூர்த்தி செய்யப்படாததால் இதனை நிராகரிக்கப்பட்டு மற்ற இரு நிறுவனங்களின் விலை விபரப் பட்டியல் உறை விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

1) மெசர்ஸ் டூவெல் அசோசியேட்ஸ், கணேசபுரம் சென்னை – ரூ. 5,29,800/–

2) மெசர்ஸ் குமரன் இண்டஸ்டிரிஸ் தாம்பரம் – சென்னை – ரூ.5,39,000/–

<u>அலுவலக குறிப்பு:</u>

குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக ரூ.5,29,800/–க்கு கொடுத்துள்ள மெசர்ஸ் டூவெல் அசோசியேட்ஸ் சென்னை நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1/18217/8/2008

**<u>தீர்மானம் எண்: 242</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

5) இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வல்லநாடு தெப்பத்தில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணி அரசால் ஒருமுறை வழங்கப்படும் சிறப்பு மானியம் திட்டத்தின் கீழ் அமைக்கும் பணிக்கு 07.11.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது,. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் செயல்முறை ஆணை எண் 393 நாள் 14.07.2008ல் ரூ.47,00,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு எஸ் சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ 10.02% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டது. இதில் ஒப்பந்தகாரர் திரு எஸ்.சுதர்சன் அவர்கள் மதிப்பீட்டை விட 10.02% அதிகமாக கொடுத்திருந்தார். எனவே ஒப்பந்தகாரரிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் ஒப்பந்தக்காரர் விலை குறைப்பு கொடுத்த விபரம்

| வ. எண் | வேலையின் விபரம் | விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்தது | விலை குறைப்பு கேட்கப்பட்டதில் விலை குறைப்பு கொடுத்தது |
|---|---|---|---|
| 4 | கான்கிரீட் 1:1/2:3 | 3758/– | 3200/– |
| 5 | கான்கிரீட் 1:1/2:3 | 3758/– | 3300/– |
| 6 | கான்கிரீட் 1:1/2:3 | 3821/– | 3350/– |
| 8 (a) | இரும்பு கம்பி | 5807/– | 5230/– |
| b) | இரும்பு கம்பி | 5807/– | 5230/– |

பட்டியலில் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தக்காரர் திரு எஸ்.சுதர்சன் அவர்கள் விலைகுறைப்பு கொடுத்ததில் திருத்தி ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.97% அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணி 2008–09க்கு பொதுப்பணி துறை தரவிலைப்பட்டியல் படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேலும் தற்போது கட்டுமான பொருள் விலை உயர்ந்துள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி பொறியர் கையேடு பக்கம் எண் (9) பத்தி எண் 2.7.2ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிகமான விலை விதிகம் 5%க்கு குறைவாக

உள்ளதால் மதிப்பீட்டை விட 4.97 மட்டும் விலைவிகிதம் அதிகமாக கொடுத்துள்ளதால் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் மேற்கண்ட பணி குடிநீர் திட்ட பணியாக உள்ளது. மேற்கண்ட பணி தற்போது உடன் செய்ய வேண்டியுள்ளதால் கீழ்க்கண்ட பணிகளுக்கு தற்போது இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டது.

இப்பணி குடிநீர் திட்ட பணியாக இருப்பதாலும் அவசர அவசியத்தை முன்னியட்டு பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை திரு எஸ்.சுதர்சன் அவர்கள் 4.97% மதிப்பீட்டை விட அதிகமான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

ம.ப,எண் 111/2008–09

**<u>தீர்மானம் எண்: 243</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

6) இம்மாநகராட்சி வார்டு எண் 41ல் உள்ள அண்ணாநகர் 12வது தெரு மற்றும் மகிழ்ச்சிபுரம் பகுதியில் சிறுபாலம் கட்டும் பணி பொது நிதியில் செய்ய 03.12.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 40 நாள் 29.08.2008ல் ரூ.90,000/– அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு கே. சுதா | மதிப்பீட்டிற்கு ரூ 15.14% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு கே.வி.மாரியப்பன் | மதிப்பீட்டிற்கு ரூ 3.90 % அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு கே.வி.மாரியப்பன் அவர்கள் 3.90% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதலாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணி 2008–09க்கு பொதுப்பணித்துறை தரவிலைப்பட்டியல்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. எனவே பணியின் அவசரம் அவசியம் கருதி பொறியாளர் கையேடு பக்கம் எண் 9 பத்தி எண் 2.7.2ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிக விலை விகிதம் 5%க்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட 3.90% மட்டும் அதிகமாக கொடுத்துள்ளதால் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மபஎண் 68/2008–09

**<u>தீர்மானம் எண்: 244</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சி பராமரிப்பிலுள்ள இரயில்வே ஸ்டேஷன் சாலையிலுள்ள தரைமட்ட தொட்டியிலிருந்து தெற்கு காட்டன் சாலையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (பேபி ஊறாம்) க்கு செல்லும் 300 mm AC குழாய்களை அப்புறப்படுத்தி விட்டு அதற்கு பதிலாக இரும்பு குழாய் மாற்றி பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 36,00,000/– (ரூபாய் முப்பத்தாறு மட்டும்) க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> மாமன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 199/2008–09

**<u>தீர்மானம் எண்: 245</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

8. தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண் 20, தெற்கு எம்பரர் தெருவில் கட்டப்பட்டுள்ள ‘‘ பரி பனிமய மாதா பஸிலிக்கா’’ பேராலயத்திற்கு சொந்தமான திருச்சிலுவை சிற்றாலயம் கட்டிடம்

இறைமக்களின் ஜெபக்கூட்டம், ஆவிக்குரிய ஜெப வழிபாடுகள் மற்றும் வெள்ளிக்கிழமை தோறும் ஏழைகளுக்கு அன்னதானம் கொடுத்தல், நோயாளிகளுக்கு ஜெபித்தல், நோயாளிகள் இலவசமாக தங்குதல் போன்ற ஆன்மீக காரியங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதால் மேற்படி கட்டிடத்திற்கு கதவு எண் 30D என வழங்கவும், சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவும் கோரப்பட்டுள்ளது.

வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளரின் 20–10–2008ஆம் தேதிய குறிப்பின்படி மேற்படி கட்டிடம் 92 x 30 என்ற அளவில் 2760 சதுர அடி அளவுள்ள கட்டிடம் ஜெப வழிபாட்டு கட்டிடமாகவும், பொது காரியங்களுக்காக பயன்படுத்தப்படக்கூடிய கட்டிடமாகவும் உள்ளதால் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவும், கதவு எண் 30D என வழங்கவும் பரிந்துரை செய்துள்ளார்கள்.

எனவே தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண் 20, தெற்கு எம்பரர் தெருவில் கட்டப்பட்டுள்ள ‘‘ பரி பனிமயமாதா பஸிலிக்கா ’’ பேராலயத்திற்கு சொந்தமான திருச்சிலுவை சிற்றாலயம் கட்டிடம் ஜெப வழிபாட்டு கட்டிடமாகவும், பொது காரியங்களுக்காக பயன்படுத்தக்கூடிய கட்டிடமாகவும் உள்ளதால் மேற்படி கட்டிடத்திற்கு கதவு எண் 30D என வழங்கவும், சொத்துவரி விலக்கு அளிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்டவிதி எண் 123(a) ன்படி மேற்படி கட்டிடத்திற்கு கதவு எண் 30D என வழஙகவும் 2760 ச.அடி அளவுள்ள கட்டிடத்திற்கு மட்டும் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கலாம்.

அ8. 27481/08

**<u>தீர்மானம் எண்: 246</u>**

அலுவலகக் குறிப்புப்படி 2760 சதுர அடி அளவுள்ள கட்டிடத்திற்கு மட்டும் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கத் தீர்மானிக்கப்பட்டது

**9.** இம்மாநகராட்சி பராமரிப்பிலுள்ள சுப்பையாபுரம், போல்டன்புரம், அரசு மருத்துவ மனை எதிர்புறம் ஆகிய இடங்களில் மழைக்காலத்தில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு இடையூராக உள்ளது. எனவே அந்த இடத்தில் மழைக்காலங்களில் தேங்கும் மழைநீரை அப்புறப்படுத்த அங்கு மழைநீர் வடிகால் மற்றும் மழைநீர் சேகரிக்கும் கிணறு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 40,00,000/– (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்)க்கு மாமன்ற அனுமதி திவண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 200/2008–09

**<u>தீர்மானம் எண்: 247</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

10. இம்மாநகராட்சி பராமரிப்பிலுள்ள கோமதிபாய் காலனி , ஸ்டேட் பாங்க் காலனி ஆகிய பகுதிகளில் மழைக்காலத்தில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு இடையூராக உள்ளது. எனவே அந்த இடத்தில் மழைக்காலங்களில் தேங்கும் மழைநீரை அப்புறப்படுத்த அங்கு மழைநீர் வடிகால் மற்றும் மழைநீர் சேகரிக்கும் கிணறு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 22, 00,000/– (ரூபாய் இருபத்திரண்டு இலட்சம்) க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 202/2008–09

**<u>தீர்மானம் எண்: 248</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

11. இம்மாநகராட்சி பராமரிப்பிலுள்ள எழில்நகர், எஸ்கே எஸ்ஆர். காலனி, குறிஞ்சி நகர் ஆகிய பகுதிகளில் மழைக்காலத்தில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு இடையூராக உள்ளது. எனவே அவ்விடத்தில் நிரந்தரமாக மழைநீர் அப்புறப்படுத்துவதற்கு மழைநீர் வடிகால் மற்றும் மழைநீர் சேகரிக்கும் கிணறு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூபாய் 25,00,000/– (ரூபாய் இருபத்து இலட்சம் மட்டும் )க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 201/2008–09

**<u>தீர்மானம் எண்: 249</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**மாமன்றம், தூத்துக்குடி**
**நாள் 29–12–2008**

**மேயர்**
**மாமன்றம், தூத்துக்குடி**